480

The Registrar of Books,
Madras 6.

480/351

13 AUG 951

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு :- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—ரு	குருகுலம், மாம்பாக்கம்; கஉ, ஆனி; 13—7—51.	தளிர்—ருக

"குணநலம் சான்றோர் நலனே; பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று"

"கடனென்ப நல்லவை யெல்லாம்; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு."

நிலையில் திரியாமை

உலகத்திலேயே அடிக்கடி நிலை மாறக்கூடிய பிறவி மக்களினந்தான் என்று துணிந்தாராயும் நம்மவர் நன்கறிவர். ஒரு பொருளின் உண்மையை அறிவதிலும் நாம் நிலையான நோக்கத்தைத் தழுவுவதில்லை. ஒரு கருத்தை ஒரு சமயம் தழுவுகின்றோம். அதனையே ஒரு சமயம் மறுக்கின்றோம்.

* * * * * * * * * *

மிக இளமையான பருவத்தில் நாம் எண்ணும் கருத்துக்களும் வகுக்கும் திட்டங்களும், வாலிபத்தில் மறைந்தொழிகின்றன. அம்மாதிரியே வளர்ந்த மனித நிலையில் ஏற்படும் உள்ளத்தின் மாற்ற நிலை முதுமை வரையில் தொடர்ந்து செல்கின்றது. அதன்பின் பழைய குழந்தைப் பருவ நோக்கமும் திட்டமும் எவ்வாறோ வந்தடைகின்றன. ஒரு புதிய பட்டமோ அல்லது எதிர்பாரா வெற்றியோ, திடுமென்று நம்மை நம் உண்மை நிலையினின்று வெளியேற்றுவதோடு நாம் பின்பற்றி வந்த கொள்கையையும் நோக்கத்தையும் சிதைக்கின்றது.

* * * * * * * * * *

நாம் காணும் கனவும் அதன் ஆட்சி நடைபெறும் நேரத்தில் நம் நிலையையே மாற்றி விடுகிறது. இங்ஙனம் அடிக்கடி மாறக்கூடிய நிலையில் உள்ள நாம் நிலையில் திரியாத பண்புடையவர்கள் ஆக முயல்வோமாக!

Addison ("The spectator")

நற்றிணை 'அழகு'

[R. G. பிள்ளை B. A.,]

மருத நிலத் தலைவன், காதற்பரத்தையைப் பிரிந்து தலைவியை அடைந்தவன், நெடுநாள் பரத்தையர் சேரியை அணுகவில்லை. காதலன் தன்னை அணுகாமையால் வருந்திய பரத்தை, தலைமகள் இல்லத்தை நெருங்கி, அவள் பாங்காயினோர் கேட்பத் தலைமகனுக்குத் தன் பிரிவுத் துன்பத்தை அறிவுறுத்துமாற்றால், பாணர்க்காயினும், விறலிக்காயினும் சொல்லும் சொற்களைப் பின்வரும் நற்றிணைச் செய்யுள் விளக்குகின்றது:-

'துனிதீர் கூட்டமொடு
துன்னா ராயினும்
இனிதே காணுநர்க்
காண்புழி வாழ்தல்
கண்ணுறு விழுமங் கைபோ லுதவி
நம்முறு துயரங் களையா ராயினும்
இன்னா தன்றே அவரில் லூரே
எரிமருள் வேங்கைக்
கடவுள் காக்கும்
குருகார் கழனியின்
இதணத் தாங்கண்
ஏதி லாளன் கவலை கவற்ற
ஒருமுலை யறுத்த திருமா வுண்ணிக்
கேட்டோர் அனையா ராயினும்
வேட்டோ ரல்லது பிறரின் னாரே''

"நம் காதலர் காண்பதற் கரியராய் விட்டார். என் புலவி தணித்துக் கூடுகின்ற வினைவுடன் என்னை எய்தாராயினும், அவர் மேனியின் அழகைப் பலகால் நான் கண்டு களித்துவேன் ஆதலின், அவரைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் உயிர் வாழ்தல் எனக்கு இனியதாகுமெனத் தோன்றுகிறது. அவ்வண்ணம் அவரைக் காணப்பெறேன் ஆதலின், யான் இனி உயிர் வைத்திருப்பதில் யாது பயன்?

நம் கண்ணில் நுண்ணிய துகள் ஒன்று படுமாயின் நம் கை உடனடியாக அக் கண்ணினிடஞ் சென்று அத் தூசியை விலக்குகின்றது. என் துயரைக் களைய நீ வாவென்று, கண், கையை அழைப்பதில்லை. அதைப் போல,நங் காதலர்மீது நாங் கொண்ட வேட்கை மிகுதியால் எமக்குற்ற துயரத்தைத் தாமே வந்து களையாராயினும், அவரில்லாத ஊர் நமக்கின்னாதாகின்றது.

'காதலர் பிரிவால் வதமுற்றவள் இவள் ஒருத்தியேகொல்! இவளைப் போல் நந் தலைவியும் தலைமகன் பிரிவழிப் பேதுறுவதில்லையோ! காதலர் பிரிவைக் கேட்ட நம் போன்ற ஏதிலரும் வருந்துகின்றார்களென்றால் என்னே இவள் வருத்தக் கொடுமை! என்று என் வருத்த வுரையைக் கேட்கும் நீங்கள் எண்ணக்கூடும்.

கணவனை யிழந்த கண்ணகியின் துயரத்தைக் கேட்டோரெல்லாம் 'ஐயோ பாவம்! என்னே இவள் துயரின் கொடுமை' என்று வருந்துவராயினும், அவள்பால் அன்பு வைத்தவர் வருந்தும் துணை பிறர் வருந்தார். அதைப்போல, என் காதலன் மீது யான் கொண்ட வேட்கை மிகுதியால் யான் வருந்துமளவு நுந் தலைவியும் வருந்தமாட்டாள். என் வருத்தத்துடன் ஒப்புநோக்க, நுந் தலைவியின் வருத்தம் எவ்வாறு குறைந்ததாகுமோ, அவ்வாறே, எங்கள் இருவரின் வருத்தத்தை நோக்குங்கால் உங்கள் வருத்தம் மிகக் குறைவாகுமன்றோ?'' என்று கண்ணகியின் கதையை உதாரணமாகக் காட்டித் தன் வருத்தத்தைப் பரத்தை வெளியிட்டாள். அவள் கூற்றை, சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலையில், ஊரலர் உரைத்த காதையில் வரும் மாதவியின் கூற்றுடன் ஒப்புநோக்குதல் இனிமை தர வல்லதாகின்றது. அம் மேற்கோள் பின்வருவது:—

"காதல னுற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா வுயிரொடு நின்றே
பொற்கொடி மூதூர்ப் பொருளுரை
யிழந்து
நற்றொடி நங்காய் நாணுத்
துறந்தேன்.''

மேல் தீட்டிய நற்றிணைச் செய்யுளைப் பாடிய, மதுரை மருதன் இளநாகனார்தம் சொல் நயமும், உவமையழகும், கருத்தாழமும் அச் செய்யுளை ஆராய்பவர்தம் புலமைக்கேற்ப இன்பம் பயப்பனவாகும். அவற்றை என் சிற்றறிவிற் கெட்டியவரை ஈண்டுச் சிறிது ஆராய்வேன்.

துன்னுதல் என்பது பொருந்துதல், அல்லது கூடுதல் எனப் பொருள்படும். காதலர் இருவர் துன்னுவதை (கூடுவதை) அவர்க்கிடையே நின்று தடுப்பது துனியாயிற்று. துனியென்பதற்கு, ஊடல் அல்லது புலவி காரணமாக உண்டாகும் சிறு வருத்தம் என்பது பொருள்.

"ஊடலிற் றோன்றுஞ் சிறு துனி
நல்லளி
வாடினும் பாடு பெறும்'' என்றும்,

'ஊடுதல் காமத்திற் கின்ப
மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்''

என்றும் ஊடலுவகை கூறிய திருவள்ளுவர் தம் குறட் பாக்களின்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

கைத்தறி ஆடைகள்
வணிகக் குறி!
—N. K. M.—
தங்க நாடா
(பதிவு)
எண் 20 முதல் 100 வரையில்
வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.
நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்
நம்பிக்கையான இடம்:
கருப்பண முதலியார்
ஸ்டோர்ஸ்,
துணி வாணிபம்,
53, கிடங்குத் தெரு, சென்னை 1.

குற்றாலக் குறவஞ்சி

[சி. து. க.]

வேட்டையில் கருத்தின்றி இருந்தும் சிங்கன், தன் காதலியான சிங்கியை மறந்தவனன்று. அவள் நினைவு அவன் உள்ளத்தில் அடிக்கடி பளிச்சிட்டு மறைந்தது. ஆண்டவன் இறைவியோடு என்றும் பிரியாது இணைந்து உறைதல் போலத் தானும் தன் காதலியோடு சேர்ந்து வைகக் கொடுத்து வையாமையை நினைத்து வருந்தினான். அவள் மடிமீதிருந்தும் தோள்மேல் ஏறியும் விளையாடி, அவளுடைய குழலும் யாழும் அமிழ்தும் பழித்த மழலை மொழிகளைக் கேட்டு இன்பம் நுகரும் பேறு வாய்த்த ஒரு பசுங் கிள்ளையாகத்தான் இல்லாமையை நினைத்து ஏங்கினான். இந் நிலையில் ஓர் அன்னப் பேடையும் சேவலும் கூடி மகிழும் காட்சியைக் கண்ணுற்றான். சிங்கியின் நினைவு அவன் உள்ளத்தில் மூண்டெழுந்தது. காட்டில் அவன் கண்ட காட்சிகள் அனைத்தும் தன் காதலியின் நினைவைப் பெருக்குவதற்கே துணை புரிதலைக் கண்டான்.

காம்பிணை யால்களி மாமயி
லால்கதிர் மாமணியால்
வாம்பிணை யால்வல்லி ஒல்குதலால்
மன்னும் அம்பலவன்
பாம்பிணை யாக்குழை கொண்டோன்
கயிலைப் பயில்புனமும்
தேம்பிணை வார்குழ லாளெனத்
தோன்றுமென் சிந்தனைக்கே.
—திருக்கோவையார்.

என்ற அருள் வாசகப்படி காணும் இடமெல்லாம் அவளாக அவன் கண்ணுக்குத் தோன்றின. மயில், சகோரம், மாடப் புறா இவைகளை விளித்துத் தன் காதலியின் பிரிவை எடுத்தியம்பி நொந்தான். காமுற்ற உள்ளத்தால் வேட்டையில் ஊக்கத்தையும் இழக்கலானான். வாய்க் கெட்டியது கைக்கெட்டாமற் போதலைப் போலக் கண்ணியிற் சிக்கிய பறவைகளும் ஒவ்வொன்றாய்த் தப்பிச் சென்றன. அவ்வாறு சென்ற காட்சி,

'தம்பமென் றேநம்பி னோரைச்
சதிபண்ணித்
தான்வாழப் பார்ப்பவர்
செல்வங்கள் போலவும்

பம்பும் வடபா லருவியிற்
றோய்ந்தவர்
பாவங்கள் நீறாகப் போவது
போலவும்

... ...

அம்பிகை பாகர் திரிகூட நாதர்

அடியவர் தோள்வந்த துன்பம் போனாற் போன்றும்' காணப்பட்டது. சிங்கன் கருத்து வேட்டையின் மேல் இல்லாததால் இவை ஒன்றும் அவனுக்குப் புலப்படவில்லை. நூவன் இந் நிலையை உணர்ந்தான். கருத்து வேறான பின்னர் வீணாக வேட்டை ஆடுதல் ஏன் என்று கருதினான். "நீ பறவைகளை வேட்டை ஆடியது போதும். செடிக்கொரு வலையாகப் போட்டுச் சிங்கியைத் தேடுவோம் வா" என்று நகைக் குறிப்புத் தோன்ற நண்பனோடு நவின்றான். இருவரும் காட்டிடங்கள் தோறும் சிங்கியைத் தேடித் திரிந்தனர். நாட்கள் பல சென்றன. சிங்கியைக் கண்டபாடில்லை. சிங்கன் காதல் மிக்க உள்ளத்தோடு சிங்கியை நினைத்துப் புலம்பலானான்.

தோடி - ஆதிதாளம்.

பல்லவி

சிங்கியைக் காணேன் என் வங்கணச்
சிங்கியைக் காணேனே—(சிங்கி)

அநு பல்லவி

சிங்கியைக் காமப் பசுங்கிளிப்
பேடையைச்
சீர்வளர் குற்றாலர் பேர்வளம்
பாடிய
சங்கீத வாரியை இங்கித நாரியைச்
சல்லாபக் காரியை உல்லாச
மோகனச்—(சிங்கியை)

... ...

இவ்வாறு இவன் புலம்பிய ஒலி காட்டில் நாலுதிசைகளிலும் எதிரொலித்தது. நூவன், தன் நண்பன் படும் துன்பங்களைக் காணச் சகியாதவனாய்த் தானே தனித்து வேறு திசையிற் சென்று தேடுவதாகவும் அவள் அடையாளங்களைக் கூறும்படியும் கேட்டனன். அடையாளங்களை அடைவே கூறக்கேட்ட நூவன் "சிங்கியைத் தேடிக் கொடுத்தால் என்ன கைக்கூலி தருவாய்?" என்று கேட்டனன். 'வாடை மருந்துப் பொடி, முதலிய சிறந்த பொருள்கள் தன்னிடம் உள்ளன என்றும் தன் காதலியைத் தேடித் தருவார்க்கு அவை என்றும் உரியவாகும் என்றும் சிங்கன் மொழிந்தான். இதனைக் கேட்ட நூவன் 'ஆற்றைக் கடத்தி விட்டால்' வானத்தில் செல்லும் வழியைக் கற்பிப்பதாய்ச் சொல்லுவாரைப் போலச் சிங்கன் சொல்லுவதாகக் கூறினன். இங்ஙனம் இருவரும் பேசிக்கொண்டு பின்னும் சில இடங்களிற் சென்று தேடியபின் ஈற்றில் குற்றால நகர் வந்தடைந்தனர். சிங்கி குறி சொல்லிச் சென்ற தெருவினை நூவன் தெரிந்து வந்து கூறினன். அத் தெருவிற் சென்ற சிங்கன் கண் முன்பாக நம் குறவஞ்சி எதிர்ப்பட்டாள். சிங்கன், தன் நல்வினை யாவும் திரண்டு எதிர்வந்தாற்போலத் தோன்றிய தன் காதலியைக் கண்டு மகிழ்ந்தான். காதலர் ஒருவரை ஒருவர் அண்மினர்.

பிரிந்தவர் கூடினாற் பேசவா வேண்டும்! தம்மை மறந்து மகிழ்ச்சிக் கடலில் திளைத்தாடினர். இன்ப உணர்ச்சி வயப்பட்டனர். சிங்கன் தன் இன்னுயிர்த் துணைவியை இத்துணை நாட்கள் தன்னைப் பிரிந்து தனித்து நின்றது ஏன் என்று கேட்டனன். தான் கொத்தார் குழலார்க்கு வித்தாரமாகக் குறிசொல்லி வந்த செய்தியைத் தன் கணவனுக்கு விரித்துக் கூறினள் குறத்தி. குறிசொல்லிப் பெற்ற 'பாடகம்' 'தண்டை' முதலிய அணிகலன்களை இன்னவென அறியாத சிங்கன் அவைகளைக் குறித்துக் கேட்பதும் சிங்கி அவைகளை விளக்குவதும் நகைச்சுவையோடு கலந்த இன்பம் விளைப்பதாகும்.

... ...

சிங்கன்—நாலுக்கு மேலே பெரிய
விரியன்
கடித்துக் கிடப்பானேன் சிங்கி
—கடித்து

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."
—புறநானூறு.

இலை 3	கர, ஆனி, 13-7-51 வெள்ளி	தளிர் 39

- - மாநாடுகள் - -

மேனாடுகளில் ஒரு நூல் வெளிவருமாயின், அதன் தரத்தினைக் காய்தல் உவத்தல் இன்றி ஆராய்ந்து, அறிஞர் பலர் தத்தம் கருத்துக்களை நூல் வடிவில் வெளியிடுவார்கள். கருத்துத் தொகுப்புகள் சிற்சில சமயங்களில் தாம் ஆராயப் புகுந்த நூலைவிடப் பெரிதாக முடிவதும் உண்டு. எடுத்துக் காட்டாக மேனாட்டுக் கவிஞர் பெருமான் செகப்பிரியர் நூல்களைப் பற்றி எழுந்த நூல்கள் அளப்பில்லாதனவாகும். அறிஞர் ஆராய்ந்து கூறும் பலவகையான கருத்துக்களைத் தொடர்ந்து நோக்கும் போதுதான் நூலைப் பற்றியும் நூலாசிரியரைப் பற்றியும் நாம் உள்ளபடி உணர முடிகின்றது. நம் தமிழகத்திலும் திருக்குறள், தொல்காப்பியம் ஆகிய நூல்களுக்குப் பலவகையான உரைகள் கற்றறிந்த மதி நுட்பம் வாய்ந்த பெரும் புல்வரால் உரைக்கப் பட்டுள்ளன. இவ் வுரைகளில் மிளிரும் அரிய பெரிய கருத்துக்களால் நூல்களைப் பற்றியும் ஆசிரியரைப் பற்றியும் ஒருவாறு உணர முடிகின்றதேனும், மேனாட்டுக் கிளர்ச்சியான போக்கோடு இதனை ஒப்பிட்டு நோக்குப்போது நாம் இன்னும் எவ்வளவோ இத் துறையில் செயலாற்ற வேண்டியிருப்பது புலனாகும்.

சென்ற சில ஆண்டுகளாக நம் தமிழகத்தில் வாழும் சான்றோர்கள் இக் குறையினை உள்ளபடி உணரத் தலைப்பட்டனர் அதன் பயனாகவே பத்துப்பாட்டு மாநாடு எட்டுத்தொகை மாநாடுகள் முதலியன நம் தமிழகத்தில் தோன்றின. மாநாட்டில் அவ் வந் நூல்களைப் பற்றி அறிஞர் மொழிந்த கருத்துக்கள் நூல் வடிவில் உலவி, மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டிச் சங்க நூல்களின் பெருமையை நாட்டிற் பரப்பின. இத் துறையில் முதன் முதல் வழி காட்டியாய் அமைந்த சென்னைத் தமிழ்ச் சங்கம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் போன்றன நம்மவர் பாராட்டுதலுக் குரியவாகும்.

முத்தமிழ்க் கருவூலமாகக் கருதக்கூடிய நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தினைச் சிறப்பித்து, இலக்கிய மாநாடு ஒன்று மிக அண்மையில் சிலப்பதிகாரப் பாட்டுடைத் தலைவன் தலைவியர் பிறப்பிடமான பூம்புகாரிற் கூடிய செய்தி முன்னர் 'முல்லைக் கொடி'யில் வெளிவந்துள்ளது.

தமிழ் மகள் உள்ளம் உவப்படையக் கூடிய இச் செயலால் பொதுமக்கள் உள்ளம் பெருமகிழ்ச்சி நிறைந்து பொங்குகின்றது.

இவ்வாறு இலக்கிய மாநாடுகள் பல தோன்றுவதோடு சமயத் தொடர்பான மாநாடுகளும் ஆங்காங்குத் தோன்றிச் செயலாற்றுவது மிகவும் பாராட்டுதற்குரியது. தருமபுரம், நாகர்கோயில் ஆகிய இடங்களில் அண்மையில் இம்மாதிரியான சமய மாநாடுகள் தோன்றி மக்கள் வாழ்வில் சைவ சமய உண்மைகள் உயிர் நாடியாகத் திகழும் சிறப்பினை நாட்டுப் பொது மக்களுக்குத் தெளிவடையச் செய்துள்ளன.

பல வகையான போக்குகளில் ஈடுபட்டு ஒன்றினும் உறுதியாக நிலைத்தல் இன்றிச் சிதறுண்டு போகும் உள்ளத்திற்குச் சமயக் கோட்பாடு அமைதியும் ஆறுதலும் அளிப்பதோடு ஒருவகை உறுதியான மனப்போக்கை உண்டு செய்கின்றது.

இலக்கியமும் சைவமும் ஆகிய இரண்டினையும் ஒருங்கு பேணி நூல்கள் பல அருளிச் செய்த பெரியார்களான குமரகுருபரர், சிவப்பிரகாசர், சிவஞான முனிவர் ஆகிய இவர்களைப் பற்றி முற்ற முடிய ஆராய வேண்டிய பணி நம்மை இன்னும் எதிர் நோக்கியுள்ளது. இம் மூவர்க்கும் தனித்தனி மாநாடுகள் முறையே ஸ்ரீவைகுண்டம், துறைமங்கலம், விக்கிரமசிங்கபுரம் என்னும் இடங்களில் நடைபெற நம்மவர் முயலலாம்.

இலக்கியம் சமயம் என்னும் இரண்டும் மிளிரும் அம் மூவர் தம் தமிழ்ப் பிரபந்தங்களின் அருமை பெருமைகளை அறிஞர்கள் அம் மாநாட்டில் தக்கபடி ஆய்ந்துரைக்க முற்படவேண்டும்.

திருக்கழுக்குன்றத்தில் சென்ற கிழமையில் நடந்த 'திருமுறை மாநாடு' மிகச் சிறப்பாய், மக்கள் ஐயாயிரவர்க் கிடையில் நிகழ்ந்தது, பெருமை தருவதொன்று. அரிய பெரிய கருத்துக்கள் அம் மாநாட்டில் உதிர்ந்தன. தென்னாடு செய்த தவம், திருமுறை விழா திருக்கழுக்குன்றத்திற் பெருவிழாவாய்த் தலைமைச் சிறப்பில் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றது.

மற்றை நாடுகளின் தரத்தில் உயர்வடைய இம் மாநாடுகள் உரிய வழியாகும்.

கனியாத காய்

[அ. தி. வீரராகவன்]

சென்னையில், அன்று இரவு தனபால் வைத்தியரையும் அரசையும் தம் மகளையும் தம் காரில் ஏற்றிக் கொண்டு தம் வீடுவந்து சேர்ந்தார். இதுவரை மகளைக் காணாது மன வேதனையுடனிருந்த மங்கையர்க் கரசியும், தம் மகள் கால்களில் கட்டுடன் காரிலிருந்து இறங்கியதைக் கண்டு முதலில் கலக்கமுற்றாள். பிறகு வைத்தியர் அக் காயங்கள் சில நாட்களுள் ஆறிவரும் என்று கூறியவுடன் சிறிது மனம் தேறிவிடும். பிறகு அவளைக் காப்பாற்றியது ஒரு நற்குணமுள்ள இளைஞன் என்று அறிந்தாள். அவன் எங்கே என்று அவள் கேட்டபோதுதான் தங்களுடன் அரசு இல்லை என்பதை அவர்கள் உணர்ந்தனர்.

அரசு காரிலிருந்து இறங்கினான். அந்த பங்களா மிகவும் பெரியதாக இருந்தது. மற்றவர்களெல்லாம் சென்ற பிறகு மெதுவாக அவர்கள் பின்னால் சென்றான். நுழைந்தவுடனே ஒரு நீண்ட தாழ்வாரம் இருந்தது. அதில் நிறையப் படங்கள் மாட்டியிருந்தன. அவற்றுள் ஒரு பெரிய பெண்ணின் உருவப் படம் அவன் மனதைக் கவர்ந்தது. அதன் மேல் அவனுக்கு ஏன் அவ்வளவு விருப்பம் உண்டாகிறது! அவ் வுருவத்தை அவன் இதுவரை கண்டவனன்று. இருந்தும் அவ் வுருவம் ஏன் அவனுக்கு அத்தகைய கவர்ச்சி அளித்தது! அவ் வுருவத்தின் வயது இருபது இருக்கும். அதன் கீழ் 'பார்வதி' என்று எழுதப்பட்டிருந்தது. தன்னால் விபத்தினின்று காப்பாற்றப்பட்ட பார்வதியோ என்று நினைத்தான். அவளுக்கு அப்பொழுது பதினாறு வயதுதான் இருக்கும்! உருவமும் வேறாகத் தோன்றுகிறது! அந்தப் படத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டு இவ்வாறு அரசு எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் போது வைத்தியர் குரலும் தனபால் குரலும் 'அரசு' என்று அழைத்ததால் சிந்தனையைச் சிதற விட்டுவிட்டு அவ் விடத்தை விட்டு அப் படத்தைப் பார்த்துக்கொண்டே அகன்றான். மங்கையர்க்கரசி அவனை மகிழ்வுடன் வரவேற்றாள். அன்று எல்லோரும் அவ் வீட்டில் ஆரவாரத்துடன் விருந்துண்டனர் விருந்தினூடே வேடிக்கைப் பேச்சுகள் பல நிகழ்ந்தன.

"அதிருக்கட்டும். உங்கள் பார்வதியைக் காப்பாற்றிய எங்கள் 'அரசு'வுக்கு என்ன வெகுமதி கொடுக்கப் போகிறீர்கள்?" என்று பேச்சை ஆரம்பித்தார் வைத்தியர்.

அதுதான் அவனுக்குச் சம்பளம் முழுவதும் நான் கட்டுவதாக ஒப்புக் கொண்டேனே. இன்னும் வேண்டுமானால் பணமும்......"

"எங்களுக்குப் பணம் வேண்டாம். எங்கள் அரசுக்கு மதித்தற்கரிய மாணிக்கம் ஒன்றைப் பரிசாகத் தர வேண்டும்."

"மாணிக்கமே எங்களிடத்தில் இல்லையே!"

நடுவில் அரசு "நான் எவ்வித பயனையும் கருதி உதவி செய்ய வில்லை" என்று கூறினான்.

"நீ பேசாமல் இரு. உனக்கென்ன தெரியும். நீ சிறுவன்" என்று அவனைத் தடுத்தார் வைத்தியர்.

இதற்குள் 'நம் மதித்தற்கரிய மாணிக்கமான பார்வதி'யை அரசுவுக்கு மணம் முடித்துவைத்து விட்டால் போகிறது! என்று மங்கையர்க் கரசி கூறினாள்.

எல்லோரும் 'கொல்' என்று நகைத்தனர். அரசும் பார்வதியும் ஒருவரை யொருவர் உற்று நோக்கி உடனே தலை குனிந்து கொண்டனர்.

சில சமயம் வேடிக்கையாகக் கூறும் வார்த்தைகளே விபரீதத்தில் வந்து முடிவது வழக்கம். அதைப் போல் மேற்கூறிய பேச்சு நம் அரசுவின் வாழ்க்கையில் மாறுதல் உண்டாக்காமற் போகவில்லை.

[தொடரும்]

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

பாடச் சொல்லிக் கேட்பதை அநாகரிகம் என வெறுத்து வானொலிப் பெட்டியில் "பலே ஜோர்! பலே ஜோர்! பட்டண வாசம்" என்ற பாடலைக் கேட்டு மகிழத் தொடங்கினர்.

ஒருவர் இருவர் வீடு முதலியவைகளை விற்றுவிட்டுப் பட்டணத்துக்கே சென்று விட்டனர். இப்படியாக நாளாக ஆக ஒவ்வொருவராய்ப் பட்டணங்களுக்குச் சென்று விட்டனர். இறுதியில் சிலரும் வீட்டைத் திறந்தே போட்டுவிட்டுப் பட்டணத்தை நாடிப் போய்விட்டனர்.

இப்பொழுது சிற்றூர் காலியான ஊராயிருக்கிறது. கோவிலிலேயே புல்லும் முட்செடியும் நிரம்ப வளர்ந்திருக்கின்றன. பூசை செய்யும் அந்தணர் எங்கோ இருந்து வந்து விரைவாகப் பூசையை முடித்துக்கொண்டு போய்விடுகின்றனர்.

இத்தகைய சிறுவர்கள் நிலையில்தான் இன்று தமிழ் நாட்டுக் கிராமங்களின் நிலையிருக்கிறது. பட்டணத்திலே மக்கள் நெருக்கம் அதிகம். கிராமங்களில் மக்களே இல்லை. பட்டணங்களில் பலருக்கு வேலையில்லை. கிராமங்களில் வயல்கள் தோட்டங்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன.

சீர்திருத்த வாதிகள் இதனைக் கண்ணுற்று ஆவன செய்யாமல் அதாவது சீர்குலைந்திருக்கும் இந் நிலையைத் திருத்தாமல் சீராயிருப்பனவற்றைத் திருத்துகிறேன் என்று முன்வந்து யாவற்றையும் கெடுக்கின்றனர். இந் நாளில் உண்மையான சீர்திருத்தம் என்பது கிராமங்களை முன்னைய நிலைக்குக் கொண்டுவரப் பாடுபடுவதே. கிராமங்கள் சீர்பெறுமானால் இன்று மக்களை வாட்டிவரும் பல சிக்கல்கள் முயற்சியின்றியே தீர்ந்துவிடும்.

சீர்திருத்தக்காரர்களும் ஆட்சியினரும் கிராமத்தின் சீர்குலைவைத் திருத்தியமைப்பார்களாக.

—முத்து.

ஒரு கிராமம்

சிற்றூர் ஒரு கிராமம். மேனாட்டார் ஆண்டு வந்த நூற்றைம்பது ஆண்டுகளிலுங்கூட அவர்கள் நாகரிகம் இக் கிராமத்திற் புகவில்லை. அதற்கு முன்னர் மகமதியர் ஆட்சியிலுங்கூட அவர்கள் பழக்கங்கள் இங்கு எட்டிப் பார்க்கவில்லை. இக் கிராமத்தார் அவர்களை 'மிலேச்சர்கள்' என்று ஒதுக்கி வந்தனர்.

இக் கிராமத்திற்கு அருகே ஒரு சிற்றாறு. ஊர்ப்புறத்திலே ஒரு கோவில். இவ்வூரில் ஆலைகள் இல்லை. பெரிய தொழிற் கூடங்கள் இல்லை. பெரிய பெரிய காரியாலயங்கள் இல்லை. எங்கும் வயல்களும் பொழில்களும் சோலைகளும் சூழ்ந்திருக்கும்.

இவ்வூரில் மக்களுக்குக் காலையில் ஏழு எட்டு மணிக்கு எழுந்திருக்கும் பழக்கம் இல்லை. எழுந்ததும் 'காப்பி' அருந்தமாட்டார்கள். 'சிகரெட்' புகையைக் கண்டால் காத தூரம் செல்வார். எதிர் வீட்டுக்காரரையோ அல்லது இவ்வூரில் உள்ள வேறு யாரையோ பற்றி விவரம் கேட்டால் எனக்குத் தெரியாது அந்த வீட்டில் கேட்டுப் பாருங்கள் என்று சொல்ல மாட்டார்கள். ஒரு வீட்டில் மங்கல விழாவோ அல்லது அமங்கல விழாவோ கொண்டாடப்பட்டால் நமக்கென்ன; நாம் ஏன் போகவேண்டும் அல்லது அதைப்பற்றிக் கவலைப் படவேண்டும் என்று மற்ற வீட்டார் இருக்கமாட்டார்கள்.

வீட்டு முற்றத்தில், வருவோரைத் துரத்தும் 'டைகர்' என்ற பெயருடைய அருமை நாய் கட்டியிருக்க மாட்டார்கள். வீட்டின் முன் மோட்டார்' நிற்காது.

நேரத்தைக் குறிப்பிடும்போது 6 மணி 50 நிமிஷம் என்றெல்லாம் சொல்லத் தெரியாதவர்களே இங்கு மிகுதி. அடிக்கடி 'டைம் என்ன இருக்கும்' என்று யாரும் இவர்களைக் கேட்கவும் மாட்டார்கள்.

இவ்வூரில் ஒரு தமிழறிஞரும் இருந்தார். அவரைத் தமிழறிஞர் என்று யான் குறிப்பிட்டாலும் வடமொழியிலும் போதுமான பயிற்சி பெற்றிருந்தார். கம்பனைப் படிப்பார்; காளிதாசனைப் படிப்பார். தொல்காப்பியம் கற்பார்; பாணினீயம் கற்பார். ஆனால் இருமொழிப் புலமை பெற்றிருப்பினும் இரண்டு மொழியையும் கலந்து எழுதமாட்டார்; பேசமாட்டார். அவரை 'இதுவும் ஒரு பிரகிருதி' என்று உலகோரில் சிலர் கூறுவர். அதையும் அவர் பொருட்படுத்தமாட்டார்.

இவ்வூரவர் கதிரவன் உதிக்க ஒன்றிரண்டு நாழிகைக்கு முன்பே எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு வயலில் வேலைக்குச் செல்வர். வயலில் வேலையில்லாத காலங்களில் நூல் நூற்றல், நெசவு செய்தல் இன்னும் இதர கைத்தொழில் செய்தல் இவற்றில் ஈடுபட்டிருப்பர். இவ்வூரில் யாரைப்பற்றிக் கேட்டாலும் அவர்கள் முப்பாட்டனார் காலத்திலிருந்து விவரமாகத் தெரிவிப்பர். யார் வீட்டிலேனும் ஏதேனும் விழாக் கொண்டாடப்பட்டால் அவ் விழாவைத் தங்கள் தங்கள் விழாவாக நினைத்து ஒத்துழைப்பார். சிலர் வீட்டின் முன்னே வண்டி நிற்கும். ஒவ்வொரு வீட்டிலும் சில பசுக்கள், காளைகள், எருமைகள் இருக்கும். நேரத்தை மணி நிமிஷக் கணக்கில் குறிக்காமல் உதயம் மதியம் அந்தி கோழி கூவும் நேரம் நடு நிசி என்று இவ்வாறு கூறுவர்.

காற் சட்டை கைச் சட்டை காலணி முதலிய ஆடைகளும் பட்டுச் சேலைகள் பொன்வண்ணம் பூசிய போலி நகைகள் கைக்கடியாரம் முதலியவைகளும் அணியும் 'ஆடம்பரம்' இவர்களிடம் இல்லை. எளிய உடையும் நல்ல பொன்னில் நகைகளும் அணிவர். இக் கிராமத்தில் உணவுக்குப் பஞ்சமேயில்லை.

இவ்வூர்ப் பெண்களுக்கு எப்பொழுதும் வேலையிருக்கும். வேலைக்காரர்களை வேலை செய்யச் சொல்லி விட்டுத் தெருவில் வேடிக்கைப் பார்ப்பதோ வம்பளந்து காலத்தைப் போக்கும் பழக்கமோ இவர்களுக்கு இல்லை.

ஆங்கிலம் கலந்த 'மணிப்பிரவாள' நடையில் பேச இவர்களுக்குத் தெரியாது. நல்ல உடல்வன்மையுடனிருப்பர். பெண்களும் அப்படியே. இதைப் போன்ற கிராமங்கள் சிலவும் சிறிது தூரத்திற்கு அப்பால் இருக்கும். இப்படி நாலைந்து கிராமங்களுக்கு ஒரு மருத்துவர்தாம் இருப்பர். தெருத் தோறும் பல மருத்துவர் என்ற வழக்கம் இங்கில்லை.

இப்படி இருந்து வந்த இந்த கிராமத்தார் தங்கள் குழந்தைகளை ஆங்கிலம் கற்க வைத்தனர். அவர்களும் விரைவில் படித்துத் தேறிய பின்னர் பட்டணங்களுக்குச் சென்று அங்குப் பல பட்டங்கள் பெற்றனர். இத் தலைமுறையினர் அருகேயுள்ள சற்றே பெரிய ஊரான பேரூருக்குப் படக் காட்சிபார்க்கப் போகத்தொடங்கினர். சிறிது சிறிதாய்க் கால் சட்டை, கைச் சட்டை இவைகளணிந்து முன்னேறினர். சிலர் நல்ல கண் பார்வை இருந்தும் அழகுக் கண்ணாடி அணிந்துகொண்டனர்.

இவர்கள் சிற்சில சமயங்களில் பெரிய நகரங்களுக்கும் போய்ப் பார்த்து வந்த பிறகு நம்மை அவர்கள் 'நாட்டுப் புறத்தார்' என்றல்லவா இகழ்கின்றனர். எங்களுக்கென்ன அவர்களைப்போல இருக்கத் தெரியாதா என்று எண்ணி வயலையும் மாடுகளையும்விற்று'மோட்டார்' வாங்கினர். வானொலிப் பெட்டிகள் வாங்கினர். 'டைகர்' நாயும் வாங்கினர்.

மாலை நேரங்களில் "இனிய பொழில்கள் நெடிய வயல்கள் எண்ணரும் பெருநாடு, கனியுங் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தரும் நாடு -- மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்கம் இனியுண்டோ — மனிதர் நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை இனி உண்டோ" என்று இவர்கள் வீட்டில் குழந்தைகளைப்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

கருத்தை அமைத்து இளநாகனார் 'துனிதீர் கூட்டமொடு தன்னாராயினும்' என்றமை அவ் வாசிரியர் தம் சொல் நயத்தையும் கருத்தாழத்தையும் புலப்படுத்தி நின்றது.

நட்பின் பெருமை பேசவந்த வள்ளுவர் "உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்றார். காதலின் பெருமை பேசவந்த இளநாகனார் அப் பெருமையைப் பரத்தையின் வாயில் வைத்து 'கண்ணுறு விழுமங் கைபோலுதவி' என்றார். உடுக்கை யிழந்தவன் கையும் கண்ணுறு விழுமங் களைகின்ற கையும் வேண்டப்படாமல் செய்கின்ற உதவிக்குச் சிறந்த உவமங்களாகும்.

காதலன் பிரிவால் பரத்தைக்குற்ற துயரத்திற்கு எடுத்துக்காட்டாக ஆசிரியர் சிலப்பதிகாரக் கதையைச் சுருக்கிக்கூறியது ஈண்டுக்கவனித்தற்பாலது. கோவலன் மதுரையில் கொலையுண்டதைக் கேட்ட கண்ணகி, பாண்டியன் நெடுஞ்செழியன் அரண்மனைக் கேகி, வழக்குரைத்தாள். கோவலனிடமிருந்து பொற்கொல்லன் கொணர்ந்த கண்ணகியின் காற்சிலம்பையும், கோப்பெருந் தேவியின் காற்சிலம்பையும் பரிசோதித்தபின், கோவலன் கள்வனன்றென்பதைக் கண்ட பாண்டியன், தான் அவனுக்கிழைத்த தீங்கை யுன்னி உயிர் நீத்தான். அரசன் உயிர் போயதைக் கண்ட கோப்பெருந் தேவியும், அவனுயிரைத் தன்னுயிர் கொண்டு தேடுபவள் போல் உயிர் துறந்தாள். அரசனும் தேவியும் துஞ்சினர் எனக் கண்ட கண்ணகி, கோவலன் கொலையுண்டதற்கு அவ் விருவரும் காரணமாகார் எனத் தெளிந்த பின்னரும் மதுரையை என் எரிக்கவேண்டும்? சீற்றத்தால் அவள் மதுரையை எரித்தாள் என்றே இளங்கோ வடிகள் தாமியற்றிய சிலப்பதிகாரத்திலும் சீத்தலைச் சாத்தனார் தாமியற்றிய மணிமேகலை யென்னும் நூலிலும் கூறியுள்ளார். அப் போராசிரியர்கள் இருவர்தம் கூற்றையும் அடியில் காண்போம்.

"யானமர் காதலன் றன்னைத்
தவறிழைத்த
கோநகர் சீறினேன் குற்றமிலேன்
யானென்று
இடமுலை கையாற் றிருகி
மதுரை
வலமுறை மும்முறை வாரா
வலமந்து
மட்டார் மறுகின் மணிமுலையை
வட்டித்து
விட்டா ளெறிந்தாள் விளங்
கிழையாள்"

சிலப். மதுரைக். வஞ்சினமாலை.

"கணவற்குற்ற கடுந்துயர் பொறாஅள்
மணமலி கூந்தல் சிறுபுறம் புதைப்பக்
கண்ணீ ராடிய கதிரிள வனமுலை
திண்ணிதிற் றிருகித் தீயழற்
பொத்திக்
காவலன் பேரூர் கனையெரி மூட்டிய
மாபெரும் பத்தினி"

மணி. ஊரலர்.

அவ்வாறு கண்ணகி சீறியது அவளது மறக் கற்பைக் காட்டி நின்றது என்றார் பிறரும்.

தன் கணவன் கொலையுண்டதற்கு அரசனோ, அவன் கோன்முறையோ காரண மன்றென்பதைக் கண்ணகி நன்குணர்ந்தாள். பொற்கொல்லனே அதற்குக் காரணமாவான் என்பதை ஐயம் திரிபறக் கண்டவள், 'அவனையும் அவன் உறைகின்ற இவ்வூரை (மதுரை)யும் இக்கணமே எரிப்பேன்' என்று துணிந்தாள். அவளறிந்த உண்மை காரணமாகவே மதுரை எரிக்கப்பட்டதே யன்றி அவள் கொண்ட சீற்றத்தாலன்று. கோவலன் கொலைக்கு அடிப்படைக் காரணம் (Ultimate cause) பொற்கொல்லன் என்பதை ஆசிரியர் இளநாகனார் 'ஏதிலாளன் கவலை கவற்ற ஒரு முலையறுத்த திருமா வுண்ணி' என்று கூறி விளக்கியது. அவர்தம் கருத்தாழத்தை நமக்கெடுத்துக் காட்டுகின்றது.

கண்ணகிக்குத் 'திருமாவுண்ணி' என்றொரு பெயரை ஆசிரியர் புனைந்துரைத்தார். அப் புனைபெயர் அரசச் செல்வங்களை யெல்லாம் உண்டவள் எனப் பொருள்படும். சிலப்பதிகாரத்திலும், மணிமேகலையிலும், அவள் திருமாபத்தினி யென்றும், மாபெரும் பத்தினி யென்றும் பேசப்பட்டாளே யொழிய, அவ் விரு நூல்களிலும் திருமா வுண்ணி என்ற பெயர் காணப்பட வில்லை. ஆனால், அப் பெயர் அப் பொருளையே கொண்ட தென்பதற்குத் தக்க ஆதாரமுண்டு. சிலப்பதிகாரம், மதுரைக் காண்டம், வஞ்சின மாலையின் இறுதியில் வரும் ஒரு வெண்பா கீழ் தரப்பட்டுளது. அவ் வெண்பா சில ஏட்டுப் பிரதிகளில் இல்லையென்ற குறிப்பையும் நாம் காண்கிறோம்.

[தொடர்ச்சி 8 ம் பக்கம்]

நஞ்சன்கூடு பல்பொடி.
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

சிங்கி—சேலத்து நாட்டிலே
குறி சொல்லிப் பெற்ற
சிலம்பு கிடக்குதடா சிங்கா
—சிலம்பு

சிங்கன்—சேலத்தா ரிட்ட
சிலம்பிற்கு மேலே
திருகு முருக் கென்னடி சிங்கி
—திருகு

சிங்கி—கோலத்து நாட்டார்
முறுக்கிட்ட தண்டை
கொடுத்த வரிசையடா சிங்கா
—கொடுத்த

சிங்கன்—நீண்டும் குறுகியும்
நாங்கூழ்ப் புழுப்போல
நெளிந்த நெளிவென்னடி சிங்கி
—நெளிந்த

சிங்கி—பாண்டிய ரூர்மகள்
வேண்டுக் குறிக்காகப்
பாடக மிட்டதடா சிங்கா
—பாடகம்

*　　*　　*　　*

சிங்கன்—வன்னாக் கொடியிலே
துத்திப்பூ பூப்பானேன்—சிங்கி

சிங்கி—காதில், வங்காளத் தாரிட்ட
சிங்காரக் கொப்படா—சிங்கா

சிங்கன்—வண்ணக் குமிழியிலே
புன்னை யரும்பேது—சிங்கி

சிங்கி—மண்ணில், தண்ணீர்ச்
சலாபத்து முத்தரூக் குத்திகாண்
—சிங்கா

இவ்வாறு உரையாடிய காதலர்க்குத் தம்மைப் பிரிவுத் துன்பத்தினின்றும் காத்து ஒன்று கூட்டிய திருவருளைக் குறித்து எண்ணம் உண்டாகின்றது. அத்தகைய திருவருள் செலுத்தித் தம்மைக் காத்த குற்றால நாதர் பெரும் புகழைப் பாடிக் கொண்டாட விழைகின்றனர். 'பாடிக் கொள்வாரெவர் ஆடிக் கொள்வாரெவர்' என்று காதலன் கேட்டதற்கு அவளைப் பாடும்படியும் தான் அதற்கேற்ப ஆடுவதாகவும் காதலி கூறினள். இருவரும் அம்மாதிரியே குற்றால [illegible]ருளைப் பாடியாடினர். குறவஞ்சி நாடகம் அந் நிகழ்ச்சியோடு இனிது நிறைவெய்துகிறது.

வாழ்க தமிழ்!

வளர்க இலக்கிய இன்பம்!

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

"பொற்பு வழுதியுந்தன் பூவைபரு
மாளிகையும்
விற்பொலியுஞ் சேனையுமா வேழமுங்
—கற்புண்ணத்
தீத்தருவெங் கூடற் றெய்வக்
கடவுளரும்
மாத்துவத் தான்மறைந்தார் மற்று."

பாண்டியனையும், அவன் தேவிமாரையும், அரண்மனையையும், யானை, சேனை, பரிவாரங்களையும், (கண்ணகியின்) கற்புண்டது என்னும் பொருள்கொண்ட அவ் வெண்பாவின் முதலிரண்டடிகளை நாம் படிக்கும் பொழுது, ஆசிரியர் இள நாகனார் கண்ணகிக்குத் திருமாவுண்ணி எனப் பெயரிட்டமை மிகப் பொருத்தமுடையதென்று நன்கு விளங்குகின்றது.

மதுரையை எரித்தபின், கண்ணகி, சேர நாட்டில் கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன் றென்னும் மலையை யடைந்து, ஒரு வேங்கை மரத்தடியில் பதினான்கு நாள் தங்கினாள் என்பது சிலப்பதிகாரக் கதையாகும்.

அக்கதையை,

"பொலம்பூ வேங்கை நலங்கிளர்
கொழுநிழல்
ஒருமுலை யிழந்தாளோர் திருமா
பத்தினி"

எனவரும் சிலப்பதிகாரப் பதிகப் பகுதியானும்,

"கடல்வயிறு கிழித்து மலைநெஞ்சு
பிளந்தாங்கு
அவுணரைக் கடந்த சுடரிலை
நெடுவேல்
நெடுவேள் குன்றமடி வைத்
தேறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க்
கீழோர்
தீத்தொழி லாட்டியேன் யானென்
றேங்கி
எழுநா ளிரட்டி யெல்லை
சென்றபின்
தொழுநா ளிதுவெனத் தோன்ற
வாழ்த்தி"

எனவரும் கட்டுரைக் காதைப் பகுதியானும் நாம் அறிகின்றோம். மருத நிலத்தைப்பற்றிப் பேசவேண்டிய அவசியத்தால், ஆசிரியர் இளநாகனார் 'குறுகார் கழனியின் இதணத் தாங்கண்' என்பதைச் சேர்த்து,

"எரிமருள் வேங்கைக் கடவுள்
காக்குங்
குறுகார் கழனி யிதணத்
தாங்கண்
எதிலாளன் கவலை கவற்ற
ஒருமுலை யறுத்த திருமா வுண்ணிக்
கேட்டோர்"

என்றமைத்து, சிலப்பதிகாரம், மதுரைக் காண்டத்தையும், வஞ்சிக் காண்டத்தையும் சுருக்கிக் கூறிய திறம் வியத்தற்பாலது.

சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலமும் அக் காவியத்தை இளங்கோவடிகள் இயற்றிய காலமும் ஒன்றே என்பதற்குப் போதிய ஆதாரமுண்டு. ஆகவே, இங்குக் குறித்த நற்றிணைச் செய்யுளை ஆசிரியர் இளநாகனார் சிலப்பதிகாரத்தைத் தழுவியே பாடினார் என்று கூற இடமுண்டு.

பதினொரு அடிகளைக் கொண்ட ஒரு அகவற்பாவில், பல பொருள்களை அமைத்துக் காட்டிய பெருமை ஆசிரியர் தம் புலமைக் குரியதாகும்.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.)